[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று உயர் நீதிமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களும், உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி சதாசிவம் அவர்களும், தமிழக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களும், நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், அனைத்து உயர் நீதிமன்ற நீதிபதிகளும், வழக்கறிஞர் பெருமன்றமும் கலந்து கொண்டு, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய திருவுருவச் சிலையைத் திறந்து வைக்க உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் வருகை தந்திருந்தபோது, அந்த விழாவில் வெறும் 6 நபர்கள் என்று கருதுகிறேன்; கறுப்புக் கொடி காட்ட முயற்சித்திருக்கிறார்கள். அந்த 6 நபர்களை அப்புறப்படுத்த வேண்டிய பொறுப்பு காவல் துறைக்கு உண்டு. அவர்கள் அப்புறப்படுத்தவில்லை; இது ஒன்று. இரண்டாவது, குறைந்தபட்சம் காவல் துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர்தான் நீதிமன்றத்திற்குள்ளே வரக்கூடாதே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடந்த சம்பவத்தையொட்டி, காவல் துறையினர் உள்ளே வரக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய உளவுத் துறையினர், இதுபோன்ற ஒரு முயற்சியில் சிலர் ஈடுபட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இழுக்கை ஏற்படுத்த, அவமானத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டு, ஒரு குழு இதில் ஈடுபட்டிருக்கிறது என்பதை ஏற்கெனவே தெரிந்து, அவர்களை அழைத்து, அன்பான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய

2010 ஏப்ரல் 26] [திரு. து. ரவிக்குமார்]

முற்பகல் 11-10

இத்தகைய அவமதிப்பைச் செய்தவர்கள் மீது மிகக் கடுமையான கோபத்திலே இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். அந்த அளவுக்கு இது அவர்களுடைய உணர்வுகளைத் தூண்டியிருக்கின்றது. இந்த அவமதிப்பைச் செய்தவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் சட்ட ரீதியாக தண்டிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே வலியுறுத்துகின்றோம். இதை ஏன் அவர்கள் செய்தார்கள் என்று சொன்னால், இப்படி ஊடக கவனம் செலுத்துகின்ற நிகழ்வுகளிலே போய் எதிர்ப்பைத் தெரிவித்தால், தாங்களும் ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கலாம் என்ற மலிவான நோக்கத்தோடுதான் இத்தகைய காரியங்களை, இந்த மாதிரியான வழக்கறிஞர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்களுடைய நோக்கத்திற்குத் துணை போவதுபோல் இல்லையென்று சொன்னாலுங்கூட, இத்தகைய சம்பவங்கள் நடக்கும்போது, ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அதைப் போய் படம் எடுக்கவோ, செய்திகள் திரட்டவோ முற்படுகின்ற நிகழ்வு இயல்பாக நடக்கின்றது. அவர்களும் அப்போது தடுக்கப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் இடையிலே போய் மாட்டிக் கொண்டு, ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் இடையிலே போய் மாட்டிக்கொண்டு அல்லலுற்றிருக்கின்றார்கள். அவர்கள் இப்படித் தடுக்கப்படுவதோ அல்லது தாக்கப்படுவதோ இனி நடக்கக் கூடாது. மாண்புமிகு முதலவர் அவர்கள் இப்பொழுதுதான் இந்த அவையிலே சொன்னார்கள். எப்படிப் பத்திரிகை சுதந்திரத்திற்கு ஒரு பாதுகாவலனாக இந்த ஆட்சி இருக்கிறது என்று சொன்னார்களோ, அப்படிப்பட்ட ஆட்சியிலே, பத்திரிகையாளர்கள் இப்படித் தாக்கப்படக்கூடாது, அப்படிப்பட்ட சம்பவங்கள் இனித் தொடரக் கூடாது. உயர் நீதிமன்ற வளாகத்திலே வன்முறையைத் தூண்டி எதிர்ப்பினைத் தெரிவித்தவர்கள்மீது கடுமையாக நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கர் அவர்களுடைய சிலையை உயர் நீதிமன்ற வளாகத்திலே வைப்பதில், இந்த அரசோ அல்லது இந்த அரசின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கின்ற நானோ யாராவது

குறுக்கீடு செய்து, அந்தச் சிலையை அங்கே வைக்கக் கூடாது என்று அடம் பிடித்திருந்தாலோ அல்லது தடுத்திருந்தாலோ, கறுப்புக் கொடி காட்ட உணர்ச்சியுள்ளவர்கள் கூடினால், அது ஒரு முறையானதாகவும், நியாயமானதாகவும் இருக்கக்கூடும்.

1972-1977 இல் தமிழகத்திலே, வட சென்னையிலே ஒரு கலைக் கல்லூரிக்கும் பிறகு இந்தியாவிலேயே முதன்முதலாக, ஒரு சட்டக் கல்லூரிக்கும் அம்பேத்கர் பெயரை வைத்தவன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முறையில், சட்டக் கல்லூரிக்குப் பிறகு, சட்டப் பல்கலைக்கழகமே இங்கு உருவாக்கப்பட வேண்டுமென்று ஒரு முயற்சியை எடுத்தபோது, அதற்கான இட வசதியில்லை என்று சொன்னபோது, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கிரீன்வேஸ் சாலையில் முதலமைச்சர் தங்குவதற்கென ஒரு வீடு என்று ஒரு பெரிய மாளிகையை ஏற்பாடு செய்திருந்தார். நாளைக்கே அங்கே குடிபோக வேண்டுமென்று நாளெல்லாம் குறித்திருந்தார். என்னை அழைக்க வந்தபோது, அவரிடம் சொன்னேன், சட்டப் பல்கலைக்கழகம் அம்பேத்கர் பெயரில் உருவாக இடமில்லை என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, எனக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கிரீன்வேஸ் சாலை வீட்டை அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய அலுவலகமாக்குங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னேன்.

முற்பகல் *11-15*

மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை வைப்பதாக மராட்டிய சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்து, பல ஆண்டுகளாகின்றன, ஆனால் தீர்மானம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லையென்ற செய்தியை ஒரு பத்திரிகையில், ஒரு மூலையில் வந்ததைப் படித்துவிட்டு, அப்படியா என்று வருத்தப்பட்டு, தமிழ்நாட்டிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், கிளைச் செயலாளர்கள் அத்தனை பேரும், இலட்சக்கணக்கில் அங்கே மராட்டிய மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டுமென்று தந்தியைக் கொடுங்கள் என்று சொல்லி, அப்போது அங்கே கவர்னராக இருந்த திரு. அலெக்ஸாண்டர் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு, இன்னும் ஒரு வாரத்தில் உங்கள் தந்திக்குப் பதிலாக இங்கே சட்டம் இயற்றப்படும் என்று உறுதியளித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மராட்டியத்திலே அம்பேத்கர் பல்கலைக்கழகம் உருவானது.

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தவன் கருணாநிதி என்று (மேசையைத் தட்டும் ஒலி) என்மீது குற்றஞ்சாட்டி, ஆகவே உயர் நீதிமன்றத்திற்குள்ளே, உச்ச நீதிமன்றத்திற்குள்ளே இவரை நுழைய விடக்கூடாது, அனுமதியோம் என்று சொல்லியிருந்தால் அது நியாயம். இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தது தப்பு என்று என்மீது குற்றஞ்சாட்டி, சில பேர் கறுப்புக் கொடியோடு வந்தார்கள் என்று சொல்ல மாட்டேன்; வந்த பிறகு சட்டைப் பையிலே இருந்த கறுப்புக் கொடியை எடுத்து வீசினார்கள் என்றால், இங்கே இந்தச் சட்டமன்றத்திலே அதுபற்றிய பிரச்சினை வந்த பிறகுதான் அது நாட்டிற்கே தெரிகிறது, யாருக்கும் அதுவரையிலே தெரியவில்லை. அங்கே கூடியிருந்த கூட்டம் ஓர் ஆயிரம் பேர் இருக்கலாம், அந்தப் பந்தலில். அந்த ஆயிரம் பேருக்கிடையிலே நான்கைந்து பேர் எழுந்து, வழக்கறிஞர் சங்கமோ அல்லது பால் கனகராஜ் போன்ற நண்பர்களுடைய தலைமையிலே உள்ள அங்கீகாரம் பெற்ற சங்கங்களோ, யாரும் ஈடுபடாத நிலையில் ஒருசில கட்சிகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு, எந்தக் கட்சிகளின் பெயரைச் சொன்னால் இங்கே பயப்படுவார்கள் என்று அந்தக் கட்சிகளுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு, அம்பேத்கர் பெயரையும் அங்கே வீணாகக் களங்கப்படுத்தி, இந்தக் கொடியை நாங்கள் பிடிக்கிறோம் என்று சொல்லி, அதன் காரணமாக ஒரு கலாம் விளைவிக்கப்பட்டது என்றால், அப்படிப்பட்ட கலாம் விளைந்ததை நான் ஏற்றுக்கொள்ளவும் இல்லை; வரவேற்கவும் இல்லை.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களைப்போல, அவர்களுடைய கவலையிலே நானும் பங்குகொள்கின்றேன். அந்தக் கலவரத்திலே பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள், செய்தி நிறுவனங்களுடைய கருவிகள் தாக்கப்பட்டன என்ற செய்திக்கு நானும் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்பேன் என்ற உறுதியையும் இங்கே அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால் ஒன்று; ஏன், எதற்காக திடீரென்று அங்கே கறுப்புக் கொடி? கறுப்புக் கொடிக்கு அஞ்சுகிற இயக்கம் அல்ல திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அது நடத்தாத கறுப்புக் கொடி இயக்கம் ஒன்று எனத் தமிழ்நாட்டிலே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு கறுப்புக் கொடி இயக்கங்களை நடத்தியிருக்கிறோம்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2010 ஏப்ரல் 26

ஆசியாவின் ஜோதி, இந்தியாவின் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கே கறுப்புக் கொடி காட்டினோம். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய தலைமையிலேயே தஞ்சைத் தரணியில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. ஆனால் எப்படி? அதற்கு ஒரு முறை கிடையாதா? முன்கூட்டியே போலீசாரிடத்திலே அனுமதி கேட்டு அவர்கள் எந்த இடத்திலிருந்து கறுப்புக் கொடி காட்டலாம் என்று வரையறுத்துச் சொல்கிறார்களோ அந்த இடத்திலிருந்துதான் தி.மு.கழகத்தின் சார்பாக எந்தத் தலைவருக்கும் கறுப்புக் கொடி காட்டப்பட்டிருக்கிறது. இது நம்முடைய பன்னீர்செல்வம் அவர்களுக்கும் தெரியும். ஏனென்றால், அவரும் எங்களோடு இருந்தவர்தானே! இங்கே இருந்து போனவர்களுக்கெல்லாம் தெரியும். ஜனநாயக ரீதியிலேதான் கறுப்புக் கொடி இயக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட இயக்கம் நடத்தியிருக்கிறது. ஆனால், திடீரென்று ஒரு தாக்குதல், ஒரு எதிர்ப்பு அதற்கு நாங்கள் பயந்து விடுவது என்றால் இயலாது.

முற்பகல் 11-20

ஏனென்றால் ஒன்றை உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் கடலூருக்குச் சென்றால் தயவுசெய்து கவனித்துப் பாருங்கள். கடலூரில் ஒரு பாலம். அந்தப் பாலத்தையொட்டி ஒரு சாலை. அந்தப் பாலத்தின் ஒரு மூலையில் பெரியாருடைய சிலை. அதை நான்தான் திறந்து வைத்தேன். பெரியார் தலைமையிலே அந்தச் சிலையை நான்தான் திறந்து வைத்தேன். அந்தச் சிலைக்கு ஒரு வரலாறு உண்டு. என்ன வரலாறு என்றால், அந்த இடத்தில் பெரியார் பேசும்போது, அவர்மீது செருப்பை வீசினார்கள் என்பதற்காக, அந்தச் செருப்பை பெரியார் பத்திரப்படுத்தி, அந்தச் செருப்பு வீசியவனைக் கூப்பிட்டு அவனுக்குப் பரிசளித்தார் என்றெல்லாம் வரலாறு உண்டு. அந்தச் செருப்பை எங்கே வீசினார்களோ, அந்த இடத்திலேயே பெரியாருக்குச் சிலை வைக்க வேண்டுமென்று, பெரியாருக்குச் செருப்பு வீசிய இடத்திலேதான் இன்றைக்கு அங்கே சிலை வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் என்னுடைய 72 ஆண்டுக் கால பொது வாழ்க்கையிலே நான் நினைத்துப் பார்க்கமாட்டேனா? அவர்களெல்லாம் பட்டபாடு; அவர்களெல்லாம் சந்தித்த இந்தச் சோதனைகள்; இந்த வன்முறைகள் என் ஞாபகத்திற்கு வராதா? அப்படி வந்த காரணத்தால்தான், நீதிமன்றத்திலே உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு முன்பாக, உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு முன்பாக,

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

எனக்கு எதிரில் நான்கைந்து பேர்கள் நான் பேச எழுந்ததும் கறுப்புத் துணியைக் காட்டி, "அனுமதியோம், அனுமதியோம்" என்று சொன்னார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், நான் உள்ளே போய் பேச ஆரம்பித்த பிறகு, நீதிமன்றத்திற்குள் அனுமதியோம் என்று சொன்னார்கள். நீதிமன்றத்திற்குள் அனுமதிக்கப்பட்டுதான் உள்ளே சென்றிருக்கிறேன். மேடையிலே அனுமதிக்கப்பட்டுத்தான் அங்கிருந்து பேச ஆரம்பித்திருக்கின்றேன். இதற்குப் பிறகு "அனுமதியோம், அனுமதியோம்" என்றால் என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. ஆக, எங்கிருந்தோ பின்னால் தூண்டப்பட்டு, அனுப்பப்பட்ட ஒரு கூட்டம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தக் கூட்டத்தில் பஞ்ச பாண்டவர்களைப் போல ஐந்தாறு பேர்கள் வந்து இத்தகைய ஒரு கலாட்டாவைச் செய்தார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நான் மிகுந்த அடக்கத்தோடு, அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றவுடன், என் பேச்சை நிறுத்திவிட்டு அது என்ன என்றுகூட பார்க்காமல், அதைப்பற்றிக் கவலைப்படாமல் பேசிக்கொண்டிருந்தேன். எல்லாப் பத்திரிகைகளிலும், 'எதைப் பற்றியும் கவலைப்படாமல் பேசிக்கொண்டே இருந்தார்' என்று எழுதினார்கள். டி.வி-யில்கூட சொன்னார்கள்; ஜெயா டி.வி-யிலும் 'எதைப் பற்றியும் கவலைப்படாமல் கருணாநிதி பேசிக்கொண்டே இருந்தார்' என்று சொன்னார்களாம். அதுதான் கருணாநிதி! *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. இந்திரா காந்தி அம்மையாரும், நானும் வ.உ.சி. சிலை திறப்பு விழா என்பதற்காக, தூத்துக்குடிக்குச் சென்றிருந்தோம். திரு. கோசல்ராம் அவர்களும் இருந்தார்கள். தூத்துக்குடியில் நமது கல்வியாளர் வீரபாகு அவர்களும் அங்கே என் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். அங்கே பெரிய கூட்டம், அந்தக் கூட்டத்தில் 10 ஆயிரம் பேர்களுக்கு மேல் இருந்தார்கள். இடையிடையே சிறு சிறு கூச்சல். கூட்டம் நடந்துகொண்டே இருந்தது. திடீரென்று அந்தக் கூட்டத்தில்— தூத்துக்குடியில் சொல்வார்கள், 'சொட்டை விழுந்துபோன கூட்டம்' என்று; சொட்டை விழுந்து போய்விட்டது என்றால், என் தலை மாதிரி. பெரிய கூட்டத்தில் வழுக்கை விழுந்த மாதிரி. வழுக்கை விழுந்தால் அந்த இடத்தில் அடர்த்தி இருக்காது இல்லையா? அதுபோன்று அங்கே சொட்டை விழுந்து போய்விட்டது,

[கலைஞர் மு. கருணாநிதி] [2010 ஏப்ரல் 26

சொட்டை விழுந்து போய்விட்டது என்று சொன்னார்கள். அப்போது இந்திரா காந்தி அம்மையார் கோசல்ராமிடம் சொன்னார்கள், "That is Karunanidhi" என்று *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தக் கூட்டம் நிறைவு பெற்ற பிறகு, அடங்கிய பிறகு, அமைதி பெற்ற பிறகு "That is Karunanidhi" என்று சொன்னார்கள். அந்த வீர வாக்கியத்தை, பாராட்டை நான் இழந்துவிட முடியுமா? *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனால்தான் உயர் நீதிமன்றத்திலே நடைபெற்ற அந்தச் சம்பவத்திலும் நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் பேசிக்கொண்டே இருந்தேன். நான் இன்று நேற்றல்ல; 16 வயது முதல் இப்படித்தான் பேசிக்கொண்டே இருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் பேசுகின்ற இடத்திலே பாம்பு வந்தாலும், பாம்பு விடப்பட்டாலும், செருப்பு வீசப்பட்டாலும், கல் எறியப்பட்டாலும் பேசிக்கொண்டேதான் இருக்கிறேன்; பேசிக்கொண்டே இருப்பேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

முற்பகல் 11-25

என்னுடைய கடைசி மூச்சு அடங்குகிற வரையில், இருதயத்திலே கடைசித் துடிப்பு நிற்கிற வரையில் பேசிக்கொண்டே இருப்பேன். *(மேசையை தட்டும் பலத்த ஒலி)* ஆனால், அந்தச் சம்பவம் நடைபெற்றபோதும் நான் பேசிக் கொண்டேதான் இருக்கிறேன். நடைபெறுவதை நான் கவனிப்பதைப்போல் இல்லை. உயர் நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் நிகழ்ச்சி முடிந்த பிறகு என்னைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். நன்றாகச் சமாளித்தீர்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். மாலைப் பத்திரிகைகளிலே யாரும் செய்தியைப் போடவில்லை; காலை ஏடுகளிலே செய்தி வந்திருக்கிறது. எனக்கு அதிலே ஒரு மகிழ்ச்சி என்னவென்றால், இந்தச் செய்தி வராமலேயே போய்விடுமோ என்று எண்ணினேன். நல்லகாலம், இந்தச் செய்தியை வெளியிட்டு விளம்பரம் கொடுத்த பத்திரிகைகளுக்கும், வானொலி போன்ற தொலைக்காட்சிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், தொலைக்காட்சிப் பெட்டிகள் சில நொறுக்கப்பட்டன; அடிக்கப்பட்டன; பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர் என்ற சம்பவங்கள் எல்லாம் என் கவனத்திற்கு நீங்கள் கொண்டு வந்ததற்காக நன்றி தெரிவித்து, உரிய நடவடிக்கைகள் அதற்காக எடுக்கப்படும் என்பதையும், எதிர்காலத்திலே அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் யாரும் இந்த நிகழ்ச்சியைப் பற்றி, என் மீது குற்றம்—நான் தவறாகப் பேசினேன், அதனால் கறுப்புக் கொடி காட்டினார்கள் என்று—யாரும் சொல்ல முடியாது; செய்தி நிறுவனங்களும் சொல்லமுடியாது.

நான் அம்பேத்கருக்காக பட்ட பாடுகளை, நான் செய்த சிறப்புகளை உலகம் அறியும். என் தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இங்கே இருக்கின்றவர்கள் யாரும், என் கட்சியிலே உள்ளவர்கள் உட்பட யாரும் நான் சொல்வதற்காக வருத்தப்படக்கூடாது. அன்றைக்கு ஜாதியை ஒழிப்பதற்காக ஆதி திராவிடக் குலத்துப் பெண்ணை என்னுடைய மகனுக்குத் திருமணம் செய்து வைத்தவன் நான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). ஒருவேளை, அதற்காகக் கறுப்புக் கொடி பிடித்தார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. கறுப்புக் கொடி பிடித்துக்கொண்டே இருக்கட்டும். ஆனால், ஒரு காலத்திலே ஆயிரம் பேர் கறுப்புக் கொடி காட்டினார்கள், 500 பேர் காட்டினார்கள் என்பதெல்லாம் மாறி இப்பொழுது, சுருங்கி நான்கு பேர், ஐந்து பேர் என்ற அளவிற்கு வந்துவிட்டது. அந்த நிகழ்ச்சியைக்கூட என்னுடைய அருமை நண்பர், வழக்கறிஞர்கள் சங்கத்தினுடைய தலைவர் திரு. பால் கனகராஜ் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார் என்பதையும் இங்கே சொன்னார்கள். முதலிலே பேசியிருக்க வேண்டாமா என்று வேல்முருகன் சொன்னார். எல்லோரிடத்திலும் பேசியிருக்கின்றார்கள், எல்லோரிடத்திலும், அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர்கள் மாத்திரம் அல்ல; இன்னும் சொல்லப்போனால், உயர் நீதிமன்ற நீதிபதியே, அவர்களையெல்லாம் அழைத்துப் பேசியிருக்கிறார், இந்தத் தகராறு வேண்டாமென்று. ஒத்துக்கொண்டுதான் போய் இருக்கிறார்கள், எந்தத் தகராறும் செய்ய மாட்டோம் என்று. எந்த நிலைமைக்காக, அந்தத் தகராறுக்குக் காரணம் சொல்கிறார்கள்? 4 போலீஸ்காரர்கள் மேலே கருணாநிதி நடிவடிக்கை எடுக்கவில்லை, கோர்ட்டு தீர்ப்பு வந்த பிறகும்கூட என்று. நான் கேட்கிறேன் நடவடிக்கை எடுத்தால், அவர்கள் சட்ட ரீதியாக அதை அணுகும்போது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்றால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை வாங்கிவிடுகிறார்கள். இந்த நிலைமையில் நான் எங்கே நடவடிக்கை எடுப்பது? இதையும் நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, உயர் நீதிமன்றத்தை இதுபோன்று அமளிக் களமாக, கலவர பூமியாக ஆக்குகின்ற யாராக

இருந்தாலும், பொதுமக்களால் அவர்கள் மன்னிக்கப்படமாட்டார்கள் என்பதையும், நேற்று நடந்த அந்த விவரத்தை, செய்தியை, நிகழ்ச்சியை நானும் மறந்துவிடுகின்றேன்; நீங்களும் மறந்துவிடுங்கள்; வழக்கறிஞர்களும் மறந்துவிட்டு நல்ல வழியை மக்களுக்குக் காட்டுங்கள் என்று இந்த அவையில் இந்த விவாதத்தின்மூலமாக நான் தெரிவித்து அமைகின்றேன், வணக்கம்.

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34 — நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். 23-4-2010 ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப் பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் மீது முன்மொழியப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதம் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

முற்பகல் 11-30

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் அமைதிப் பூங்காவாகத் தமிழகத்தைத் திகழ வைத்தார்கள். தமிழ்நாட்டை மின்வெட்டே இல்லாத மாநிலமாக வைத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். தமிழ்நாட்டில் விலைவாசி உயராமல்